**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 185/2022**

**Deposition of witness for prosecution : PW- 8 (LW- 8 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | தமிழரசன் | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 21.08.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது அண்டர்காட்டில் வசித்து சென்னையில் தனியார் கம்பெனியில் மேலளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.11.2020ம் தேதி அன்று காலை 8.30 மணியவில் குமாரவேலன் என்பவர் அவருடைய வயலில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பனங்கொட்டையை பிடுங்கி எடுத்துக்கொண்டிருந்தபோது எதிரி அன்பழகன் கொச்சை வார்த்தைகளால் திட்டிக்கொண்டு உன் சாவு என்கையில்தாண்டா என்று சொல்லி அன்பழகன் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து குமாரவேலவனின் தலையை நோக்கி வெட்டி வந்தார். அப்போது அவர் தலைக்கு வந்த வெட்டை தடுத்ததால் அவருடை அிடது கையால் தடுத்துபோது ஆட்காட்டி விரலுக்கு இடையே வெட்டு விழுந்தது. மறுபடியும் வலது கையால் தடுத்தபோது குமரவேலனின் கையை அன்பழகன் கடித்து விட்டார். குமரவேலவன் வலிதாங்காமல் சத்தம் போட்டதும், அக்கம் பக்கத்தினர்கள் ஓடிவந்தவுடன் அன்பழகன் குமரவேலவனை பார்த்து என்றைக்கிருந்தாலும் உன் சாவு என்கையால்தாண்டா என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு சென்று விட்டார். அங்கு அருகாமையில் இருந்த ராஜாமணி என்பவர் 108 ஆம்புலன்சிற்கு போன்று செய்து வரவழைத்து வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். அங்கு முதல் உதவி சிகிச்சை முடித்து மேல் சிகிச்சைக்காக குமரவேலவனை தஞ்சாவூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை – இல்லை**